முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 792**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**29.11.2021**, திங்கட்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
தானதர்மம் சக்தி கொண்டே
தரணியை மாற்ற வந்த அவதார அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமண்யர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 13ம் நாள், 29.11.2021 திங்கட்கிழமை)
வரமென என்சக்தி பெருகிவர
வல்லமைபட அரங்கன் உன் ஆற்றல்
3. ஆற்றலதும் உலகமெங்கும் பரவி
ஐயமற ஞானிகள் துணைபட
மாற்றம் செய்யும் கலியுகம் தன்னை
மகான்கள் நிறைந்த ஞானபூமியாக
4. ஆகவே இந்த கலியுகம் மாற்றம் கண்டு
அரங்கன் உன் சக்தியாலே அகிலத்தில்
ஞானவான்கள் படை பெருகி ஞானிகள் ஆளும் காலமாக
ஞானசித்தர் ஆட்சிக்காலம் சடுதி உருவாகி
5. ஆகியே உலகம் மாற்றம் பெறும்
அரங்கன் உன் ஞானத்தால் இந்த அற்புதம் நிகழும்
வரமென உன் கரம்பட தீட்சைபெறும் வையகத்தார் அனைத்து பேருக்கும்
திறம்பட ஆறுமுகன் அருளிவர தொடர்ந்து அரங்கன் வழி வரும் மக்கள் மூலமே
6. மூலமாக இந்த உலகத்தை ஞானலோகமாக
முழுமைபட மாற்றி ஞான ஆட்சி
காலமதில் ஆறுமுகன் யான் நடத்துவேன்
கலியுகத்தில் அரங்கன் வழி இந்த அற்புதம் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–